குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

சிவமயம்.

# மாவைச்சுப்பிரமணியக்கடவுள்

# பதிகம்.

காப்பு.

## வெண்பா.

செம்பதுமை சேர்மாவைச் செய்யகுகன் மேற்பதிகம்
அம்புதுமை யாக வறைகுதற்கு—நம்புதுமை
ஆனையரு ளைங்கரத்தா னன்பர்க் குதவுமடி
சோனையருள் செய்யத் துதித்து.

நூல்

## ஆசிரியவிருத்தம்.

திங்களொடு பானுமுத லானநவ நாயகர்கள்
சேரொளிகொ ணவரத்தினச்
செங்கனக முடியேறு குழையாறி ரண்டுமிளிர்
தேசோம யத்துருவமாந்
தேங்கருள் விழிக்கமல மீரா று கொண்டழகு
செய்யுமுக மாறினோடு

துங்கமுறு முந்நூலொ டாரம்ப தக்கங்க
டொங்குநீ பத்தலங்கல்
தோய்ந்தமணி மார்பகம் வாய்ந்தவே லாயுதந்
தூயகுலி சப்படையொடு
துயல்வரு மலர்க்கர மியல்வர வளர்ந்தோங்கு
தூவிமயி லேறியிருபாற்
புங்கவர்க ளுக்கமுத மிட்டமா விடம்வந்த
பொற்கொடியர் பற்றிநிற்பப்
புகழுமடி யாருளக் கமலத்தில் வந்திடும்
புண்ணியபு ராணமுதல்வா
பூவடியை நம்பினேன் பூசிக்கு மடியனேன்
புன்மைதீர்த் தருளவேண்டும்
எங்குமுள பொருளாயு மென்னுளக் கவலைதனை
யேனொழிக் காதொழித்தாய்
யேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (க)

அரிபிரம ரறியாத வானந்த சோதியா
யகிலாண்ட மாகியுற்ற

வாதிசிவ நேத்திரத் தாறுபொறி யாகவந்
தவியாத சோதியாகி
யனலனோ டனிலனும் மாற்றும லாற்றியே
யணிகங்கை வைப்பவதுதன்
வருதிரைக் கையினாற் சரவணப் பொய்கையின்
வைக்கவந்தா றுருவமாய்
வாடாத மாதரா றுமுலையூறு பாலமுத
வாரியுண் டாடிநிற்கும்
வடிவினைக் காணநின் னன்னையும் மத்தனும்
மால்விடையி வர்ந்துவந்து
கருதின ரெடுத்துநன் மணிமார்பு றத்தழீஇக்
காதலாலொன் றுசேர்த்துக்
கந்தனெனு நாமமிட் டவர்நடு விருத்துறக்
காணுசோமா ஸ்கந்தமாய்க்
காரேறு வானநெறி தானேறு கையையுறு
கந்தகிரி வந்தபரமே
இருவினைக் கீடான வாசையுற் றுழலுவேற்
கெப்போது னருள்கிடைக்கு
மேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
ம... : : சுன்னாகம்,

யெழில்வள்ளி கணவனே பொழின்மாவை நேயனே
யீசகுரு நாதகுகனே. (உ)

கங்கையைத் தலைமீது மங்கையை மடிமீது
கண்டழகு கொண்டசுடரைக்
கருத்தினி லிருத்தியனு பூதியின னாகியவ
கத்தியனி ரந்துநிற்பக்
கலைஞான வுபதேச குருவாகி யினியதமிழ்
காட்டுகுரு வாக்கிவைத்த
மங்கையுமை செப்போது கொங்கைபா லமுதூறி
வழியும்வாய் முருகவுன்றன்
மாறிலா வாறெழுத் தோதுவார் தீவினை
மாய்வதற் கையமுண்டோ
வரிசைபெற் றுயர்தேவ ரெல்லோரு முன்னுமம்
வாயாலி சைத்தவரலோ
அங்கியொரு கையில்வைத் தடியின்மற் றொருகைவைத்
தபயமொடு தமருகம்மு
மமரவைத் தமராத திமிரபத கன்முதுகி
னடிவைத்து நடனமாடி
யானந்த மொடுநோக்க வானந்த னைத்தாவு
மரியவரை தோறுமாடி

இங்கெனைக் கருணையா னோக்காது கைவிடின்
யாவரெனை யஞ்சலென்பா
ரேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (ரு)

பங்கயன் மாயவன் னிந்திரன் வானவர்கள்
பாலாழி கடையுநாளிற்
பாலாகி வந்தவிட முண்ணுமென் றஞ்சியே
பார்த்தோடி வந்தடுக்கப்
பக்கத்த மைத்துவரு நஞ்சினை மிசைந்தபசு
பதிதந்த பாலநின்னை
அங்கயற் கண்ணியுமை மங்கைகண் குளிரவந்
தாடெங்கு ழந்தையென்ப
ரசைவற்ற மேருகிரி யிசைவுற்று வானவர்க்
கானபே ருருவுகாட்ட
வையநின் னுருவினைக் கண்டஞ்சி யவாழித
லறிகிலாப் பரமவாதர்
புங்கவர் பெரும்பகை துரத்துமொரு வேல்கொண்டு
புரியவிழ்க டப்பமாலை

புராளுகடி மார்பின்வட மேருநிக ரிணைமுலைகள்
புக்குநன் கழுந்தத்தழூஉம்
புயலளக வள்ளியொடு தெய்வானை பாங்குறப்
புள்ளிமயி லேறிவருவாய்
எங்கிருந் தாலுமுன் னடிமையைக் கைவிடே
லிகபரசு கப்ரசாத
வேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (ச)

வைகறைப் போதெழுந் தாறெழுத் தோதிவட
வாரிதியொ டமருதீர்வை
வார்புனன் மூழ்கிவெண் ணீறப்பி யக்கமணி
மார்புறவ ணிந்திருந்து
மாசந்தி வந்தனை முடித்துமதி தவழ்சோலை
மாவைநக ரத்தில்வந்து
பொய்யெனப் புகலுமுடல் பூமியிற் புராளுறப்
புரிவலஞ் செய்தெழுந்து
புண்ணியமெய் யாலயத் துட்புகுந் தன்போடு
போரானை வதனத்தனைப்

பூசைபுரி வித்தபின் னுசையொடு நின்கோயிற்
பொன்வாசல் முன்புநின்று
கைகளைச் சிரமீது சேர்த்துநாக் குழறிடக்
கண்ணினீ ராறுபெருகக்
களிப்பினுட னுயிரத் தெட்டுநா மமுஞ்சொலிக்
கடம்பலரினர்ச் சனைபுரீஇக்
கற்பூர வாராத்ரி கங்கண்டு கசியுமிரு
கண்ணுளார் தங்களுக்கிங்
கெவ்வகைப் போகமும் மிசைவுறச் செய்துநின்
னிணையடி யளிக்குநாத
வேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (௫)

கற்பகத் தருநீழல் பிரியாத ரம்பையர்கள்
காட்டநா விருமங்கலம்
கைத்தாள மொத்தாடு மாதர்வா யோடுதீங்
கவியமுத முண்டுநீண்டு

# பதிகம்.

காழ்கொண்ட நாலுகோட் டிபமுகைத் தசுரரைக்
காதிக்குறைக் குமொருவன்
பொற்பத மிழந்துபுவி புக்கடவி போயுறப்
புங்கவரை யேவல்கொண்டு
புன்புலால் சுமப்பித் திருஞ்சிறைப் புகுத்துளம்
புண்ணுறவ ழுங்கவைத்துப்
புரிசடைப்பண்ணவன்பொன்னடி தனைப்பேணிப்
பொருவில்பல் வரங்கள்கொண்டு
அற்புதத் தாயிரத் தெட்டண்ட மரசுசெய்
தரியமா யங்கள்கற்ற
வவ்வசுர சூரபன் மாவினைச் சங்கரித்
தாடுமயி லொடுசேவலா
வாக்கிமக வானையா சேற்றிமுடி சூட்டியவ
னருமைமக டனைமணந்த
எற்பக வெறிக்குநின் னெழிலோங்கு புகழ்வகுத்
திசைக்கவென் னுன்முடியுமோ
வேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (சு)

தாமோத ரக்கடவு ளுபியங் கமலமலர்
தந்தபர மேட்டிதன்னைத்
தலையிட்டு விரிவுற்ற வுலகத்தை யருள்செய்து
தானேது லங்குபிரம
தற்பரா நந்தகுக வற்புதா நந்தசிவ
சற்குண தீதநாத
காமாதி யாறுபகை யேறுதி ருக்கவுங்
கருத்திலெப் போதுமுன்னைக்
கருதாத கசடரைக் கூடாதி ருக்கவுங்
கற்றோர வைக்கணின்று
கற்பகம் போலவுரை தப்பாது ரைக்கவுங்
காரேறு கேட்டபணிபோல்
ஏமாறி யெதிர்நிலா தேற்றபகை யோடவு
மெட்டுவகை யைசுவரிய
மெல்லாமி சைந்துலகில் வாழ்ந்திருந் தீற்றினின்
னிணையடி நிழற்கெய்தவு
மீராறு கருணைவிழி நோக்க வேணுமென்
றென்றுமுனை யேத்தல்புரிவேன்
ஏமார்ந்து மாநிலத் தவர்வாழ வந்தபர
வேகாந்த நாதவொளியே

யேழையேன் செய்தபிழையாதேனுமுண்டாயினே
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாத குகனே. (எ)

ஐம்மையார் பூமிநீர் தேயுவளி யாகாச
மானவைம் பூதமுந்நீ
யரிதிங்க ளியமான ஞனமூன் றேடுசேர்ந்
தட்டமூர்த் தங்களுந்நீ
யாயினும் மடியாரு ளத்தினைச் சோதிக்க
வகலநின் றுய்வதுந்நீ
பொய்ம்மையாந் தாய்தந்தை மனைமக்க ளாதியாம்
பொருகடலி லிடுவதுந்நீ
பொன்னுசை யலையடிப் பட்டுவரு மின்பமாம்
புளினத்தி லேற்றுவதுந்நீ
போனசென் மத்தினிற் செய்ததவ மாய்ந்துமிகை
போக்கியருள் புரிவதுந்நீ
மெய்ம்மையா யடியவரு ளத்துறைந் தவர்க்கென்று
மிக்கருள் சுரப்பதுந்நீ
மேலான கல்வியும் மழியாத செல்வமும்
மேவுறவ ளிப்பதுந்நீ

வேறொருவர் மனைமேவி யிரவாம லெந்நாளும்
வேண்டுவன தருவதுந்நீ
எம்மையாண் மாலினிரு கண்ணிகரும் வல்லிய
ரிணைந்துபடர் தருவுநீயே
யேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளிகணவனேபொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (அ)

மாருதப் பிரவல்லி தன்குதிரை முக்மாற
மாற்றிநன் முகமாக்கினை
மன்னன்முசு குந்தனுக் குன்றம்பி மார்களை
மன்பொருந ராக்கிவைத்தாய்
மறைமுனி மகத்தில்வரு செச்சையை யிவர்ந்துதிரு
வாகனமதாக்கி வைத்தாய்
பாரினின் மலைக்குறவர் பால்வந்த வள்ளியைப்
பற்றிமனை யாக்கிவைத்தாய்
பாரிடமு ஞதபடி பாடுநற் கீரனைப்
படிமீது மீட்டுவைத்தாய்
பண்டிதர்க ளீண்டியுறை சங்கத்தி ருந்துபொருள்
பகரவும் பண்ணிவைத்தாய்
சூருடல்பி ளந்துபின் கோழிமயி லாய்வரச்
சொல்லடிமை யாக்கிவைத்தாய்

புலவரகம்,
சுன்னாகம்,
இலங்கை.

தொல்பரங் குன்றினிற் றெய்வானை யம்மையைத்
துணைமனைவி யாக்கிவைத்தாய்
துய்யதோள் வீரனுக் குருவெலாங் காட்டியே
தூயனுச் செய்துவைத்தாய்
ஈருமிரு தலைக்கொள்ளி யெறும்புபோ லலைந்திடும்
மிழிஞனுக் கருளலரிதோ
வேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (கூ)

உன்னையல் லாதுபிற தெய்வத்தை நேசிக்கி
னுன்புகழ்க் கேற்றமாமோ
வொப்பிலாக்கருணை தருநாளெதுவென் றென்றுன்னி
யுன்னியென் மனமுருகுதே
யுற்றதுணை யானநீ யறியார்கள் போலொன்று
முரையாதி ருக்கலாமோ
மின்னையல் லாதுவமை யில்லாத யாக்கையின்
மேவுபல னென்னைகொல்லோ
மேனுளி னீட்டுதவ மில்லெனினு மக்குறையை
வீட்டியருள் கூட்டலரிதோ
விடையேறி யருண்மைந்த வுமைமாது பெறுகந்த
வெற்றிவே லுற்றகைய

அன்னையர்க ளிருவரையு மிச்சைகிரி யாசத்தி
யாக்கிநடு வாகிஞான
மானவடி வாகிமுது ஞானகுரு வாகிவழி
யடியார்கள் பாவினுக்கே
யாசையுற் றவர்மனப் படியெலா மாக்குவோ
யருடாக் கலியுகத்தில்
என்னையுனை யல்லாது கண்கண்ட தெய்வமிலை
யென்றந்தை யன்னைகுருவே
யேழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
னின்னேபொ றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே பொழின்மாவைநேயனே
யீசகுரு நாதகுகனே. (க0)

---

## வா ழ் த் து.

ஆவுமந் தணரும் வாழ்க வமரரு முகிலும் வாழ்க
கோவுஞ்செங் கோலும் வாழ்க கோயிலு மறையும் வாழ்க
பாவுமைந் தெழுத்தும் வாழ்க பற்பமு மணியும் வாழ்க
பூவுநல் லறமும் வாழ்க புனிதரு முறையும் வாழ்க.

மா வை ச்
சுப்பிரமணியக்கடவுள் பதிகம்
மு ற் றி ற் று.

---

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னுகம்,
இலங்கை.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.